
නිදහස් මාධ්‍ය ව්‍යාපාරය
சுதந்திர ஊடக இயக்கம்
FMM SRI LANKA Free Media Movement

# මාධ්‍ය නිදහස: නිරීක්ෂණ වාර්තාව
# ஊடக சுதந்திரம்: கண்காணிப்பு அறிக்கை
# Media Freedom Rights Monitoring Report

MFRMD

2021 ஒக்டோபர்–நவம்பர்

தொகுதி 10-11



பேராசிரியர் புத்தி மாரம்பேவை கமத்தொழில் அமைச்சில் பதிவி வகித்த சகல பதவிகளில் இருந்தும் நீக்கம் செய்யப்பட்டமை.



அருண பத்திரிகை ஆசிரியரான மஹிந்த இலேப்பெருமவை விசாரணைக்காக குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு அழைத்தமை.



ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரன் தாக்கப்பட்டமை.

ஊடக சுதந்திரம் குறித்து ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் நடைபெற்ற நிகழ்வுகள் மற்றும் முந்தைய நிகழ்வுகளின் பின்தொடர்வுகள் தொடர்பில் சுருக்கமான முறையில் கண்காணித்து இவ் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இந்த அறிக்கையானது ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்களின் பேச்சு உரிமை, கருத்துரிமை தொடர்பான பிரச்சினைகள், புதிய சட்ட உருவாக்கம் மற்றும் சர்வதேச சமூகத்தின் செயற்பாடுகள் தொடர்பாகவும் கவனம் செலுத்துகிறது. ஊடக சுதந்திரம் மற்றும் ஊடக உரிமைகள் தொடர்பில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சுதந்திர ஊடக இயக்கம் தேர்ந்தெடுத்துள்ள பகுதிகூறுகள் மற்றும் நோக்கங்களுக்கு அமைய 20 நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் ஒக்டோபர் – நவம்பர் 2021 அறிக்கையில் உள்வாங்கபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவற்றில் பெரும்பாலானவை கருத்துச் சுதந்திரத்திற்கு எதிராக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட நேரடி மற்றும் மறைமுக நடவடிக்கைகளாகும், மேலும் ஊடகவியலாளர்கள் தவிர, அரசாங்க அதிகாரிகள், புத்திஜீவிகள் மற்றும் மதத் தலைவர்களின் கருத்து தெரிவிக்கும் சுதந்திரத்திற்கு எதிராக "நிகழ்ந்த மிக மோசமான" ஒடுக்குமுறைகள் பதிவாகியுள்ளது. சட்டப் கோவையில் இருந்து குற்றவியல் அவதூறு அல்லது மானநஷ்ட சட்டம் நீக்கப்பட்ட போதிலும், அமைச்சர்கள் மற்றும் அதிகாரமிக்க அதிகாரிகளின் புகாரின் அடிப்படையில் பல நபர்களை குற்றவியல் திணைக்களத்திற்கு அழைத்து விசாரணை மேற்கொள்ளும் போக்கு கடந்த இரு மாதங்களாக நடைபெற்று வருகின்றமை அவதானிக்ககூடியதாக உள்ளது. மேலும் பத்திரிகை ஆசிரியர்களை குற்றவியல் திணைக்களத்திற்கு விசாரணைக்காக அழைப்பு விடுக்கும் நடவடிக்கை செப்டம்பர் மாதத்தில் நடந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். குற்றப்பத்திரிகையின்றி 18 மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த கவிஞர் அஹ்னாப் ஜஸீம் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டமையானது சிறந்த நடவடிக்கையாக கருதப்பட்டபோதிலும், அவரது உரிமைகளை காவல்துறை கடுமையாக மீறும்வகையில் செயற்பட்டுள்ளது. கிண்ணியாவில் இடம்பெற்ற போராட்டத்தை அறிக்கையிடச் சென்ற மூன்று ஊடகவியலாளர்கள் மீது போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சிலரினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தை கண்டித்து சுதந்திர ஊடக இயக்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

## ஒக்டோபர்-நவம்பர் மாதங்களில் நடந்த நிகழ்வுகள்

1. இலங்கை பத்திரிகை பேரவை அறிமுகப்படுத்திய ஊடக ஒழுக்கக்கோட்பாடுகள் கட்டமைப்பின் 40வது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த மாநாட்டில் செய்தி ஆசிரியர் ஒருவர் தெரிவித்த கருத்து ஊடக சமூகத்தில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.
2. கூட்டு முயற்சியினூடாக நவீன சமூகத்திற்கு ஏற்ற ஊடக நெறிமுறை கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பாக ஊடகத்துறை அமைச்சர் தெரிவித்த கருத்து.
3. ஊடகவியலாளர்களுக்காக "இலங்கைபட்டயஊடகவியலாளர்கள் நிறுவனம்" என்ற புதிய நிறுவனத்தை நிறுவுவதற்கு வெகுசன ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெருமவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை ஒப்புதல்.
4. பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்கவின் வட்ஸ்அப் உரையாடல்களைக் குற்றவியல் விசாரணைத் திணைக்களம் இரகசியமாகச் செவிமடுத்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்த கருத்து.
5. "சுற்றுச்சூழலுக்கு உகந்த விவசாயம் தொடர்பான அரசாங்கக் கொள்கைத் தீர்வு" தொடர்பாக வெளியிட்ட நிபுணத்துவக் கருத்து காரணமாக, பேராசிரியர் புத்தி மாரம்பேவை கமத்தொழில் அமைச்சில் அவர் வகித்த பதவிகளில் இருந்து நீக்கம் செய்யப்பட்டமை.
6. "சதியங்க அருண" பத்திரிகையின் கடந்த ஒக்டம்பர் 23 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட பிரதான தலைப்புச் செய்தி தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காகப் பத்திரிகையின் ஆசிரியர் மஹிந்த இலப்பெரும குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தால் அழைக்கப்பட்டமை.
7. லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை உட்பட மூன்று ஊடகவியலாளர்களின் படுகொலைகள் தொடர்பாக நெதர்லாந்தின் ஹேக் நகரில் உள்ள ஊடகவியலாளர் படுகொலைகள் தொடர்பில் நிரந்தர பொது தீர்ப்பாயத்தின் விசாரணை ஆரம்பிக்கப்பட்டமை.
8. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் மூன்று மாதங்களுக்கும் மேலாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள லங்கா ஈ நியூஸ் இணையத்தளத்தின் ஊடகவியலாளர் கீர்த்தி ரத்நாயக்க சார்பில் உச்ச நீதிமன்றில் அடிப்படை உரிமை மனு தாக்கல்.
9. கோட்டே மாநகர சபை அதிகாரிகளின் முறைப்பாட்டின் பேரில் New Citizen வலைத்தள ஊடக அமைப்பில் ஊடகவியலாளர் சியத் மென்டிஸ் என்பவரை வெலிக்கடை பொலிஸார் கைது செய்தமை.
10. சர்ச்சையை ஏற்படுத்திய சீன உர கையிருப்பு குறித்த செய்தி வெளியிட்டமை காரணமாக அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளதாகவும், அதற்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்து உர இறக்குமதியாளர் சிரச ஊடக வலையமைப்பிற்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளமை.
11. சமூக ஊடகங்கள்மூலம் அரசாங்கத்தை அல்லது அரசாங்கத்தின் கொள்கைகளை விமர்சிக்கும் அரச ஊழியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் அரச ஊழியர்களுக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளமை.
12. கவிதைத் தொகுப்பொன்றை எழுதியதற்காகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 18 மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த அஹ்னாப் ஜஸீமை நீதிமன்றத்தில் முன்னிலையில் ஆஜர்படுத்தியமை.
13. 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (தற்காலிக ஏற்பாடுகள்) மீளாய்வு தொடர்பான அதிகாரிகள் குழுவின் அறிக்கையை ஜனாதிபதிக்கு கையளித்தமை.
14. கொத்தலாவல சட்டமூலத்திற்கு எதிராக பாராளுமன்ற சுற்றுவட்டத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது கைது செய்யப்பட்ட ஐந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் 105 நாட்களின் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.
15. சமூக வலைதளத்தில் கருத்து தெரிவித்ததன் காரணமாகத் தம்மை அநியாயமாகக் கைது செய்தமையானது தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகத தெரிவித்து சமூக ஆர்வலர் சிரந்த ரன்மல் அமரசிங்க உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.
16. வடக்கில் யுத்தத்தில் இறந்தவர்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களை நினைவு கூருவதைத் தடுக்கும் வகையில் 8 பேருக்கு எதிராக வவுனியா நீதவான் தடை உத்தரவு பிறப்பித்து, பின்னர் அந்த உத்தரவில் திருத்தம் செய்தமை.
17. பலவந்தமான தனிமைப்படுத்தலின் மூலம் தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.
18. ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பில் அரச புலனாய்வுப் பிரிவின் பிரதானி செய்த முறைப்பாட்டையடுத்து, கொழும்பு உயர்மறைமாவட்ட ஊடகப் பேச்சாளர் பேராசிரியர் அருட்தந்தை சிறில் காமினி குற்றவியல் விசாரணைத் திணைக்களம்விசாரணைக்காக அழைக்கப்பட்டமை.
19. கடந்த நவம்பர் 23ஆம் திகதி கிண்ணியாவில் படகு கவிழ்ந்து 6 பேர் உயிரிழந்த சம்பவத்தைக் கண்டித்து இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பில் செய்தி சேகரிக்கச் சென்ற மூன்று ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டக்காரர்களால் தாக்கப்பட்டனர்.
20. முல்லைத்தீவில் உள்ள லங்காஸ்ரீ ஊடக நிறுவகத்தின் ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரன் முள்ளிவாய்க்கால் பகுதியில் செய்தி சேகரிக்கச் சென்றபோது இராணுவ படையினரால் தாக்கப்பட்டார்.

**அட்டவணை எண்: 01**

**அறிக்கையிடப்பட்ட மொத்த நிகழ்வுகளின் எண்ணிக்கை – 2021 ஒக்டோபர்–நவம்பர் மாதம்**

| இலக்கம் | உள்ளடக்கப்பட்டுள்ள பகுதிக்கூறுகள் | அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள் மற்றும் சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 08 |
| 02 | சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள | 09 |
| 03 | நிபுணத்துவம் | 03 |
| | **மொத்தம்** | **20** |

## ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம்

**ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் எனப்படுவது ஊடகவியலாளர்கள் தங்களது தொழிலை உடல்சார் மற்றும் மனரீதியாக ஒர்முகப்படுத்தி சுயாதீனமாக தமது ஊடக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சுதந்திர சூழல் ஆகும். இது ஊடக சுதந்திரத்தின் அடிப்படை காரணியாகவும் காணப்படுகின்றது. அதே சமயம், ஊடகச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டுமாயின், குடிமக்கள் ஊடகங்களில் அல்லது வேறு வழிகளில் பின்விளைவுகளை அல்லது தனது பாதுகாப்பிற்கு ஆபத்து ஏற்படாத விதத்தில் சுதந்திரமாக தனது கருத்துக்களை வெளிப்படுத்த சூழல் உருவாக வேண்டும். கருத்துச் சுதந்திரம் என்பது அமைதியான முறையில் ஒன்றுகூடல், போராட்டம் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கை போன்றவைகளை உள்ளடக்கியதாகும். இந்த அடிப்படை சுதந்திரத்தின் எட்டு மீறல்கள் ஒக்டோபர்–நவம்பர் மாதங்களில் பதிவாகியுள்ளன. குற்றவியல் அவதூறுச் சட்டம், சட்டப் புத்தகத்திலிருந்து நீக்கப்பட்ட போதிலும், செப்டம்பர் மாதத்தில் அமைச்சர் ஒருவரின் புகாரின் பேரில், பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் ஊடகவியலாளர்களைக் குற்றவியல் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டமை அறிக்கையிடப்பட்டுள்ளது. மேலும் ஒக்டோபர் மாதத்தில், ஜனாதிபதியின் செயலாளரின் முறைப்பாட்டையடுத்து, அருண பத்திரிகையின் ஆசிரியர், குற்றவியல் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டதோடு, நவம்பர் மாதத்தில், பிரபல சமயத் தலைவர்களின் ஒருவரான, அருட்தந்தை சிறில் காமினி, குற்றவியல் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார். நிபுணதத்துவம் சார்ந்த கருத்தைத் தெரிவித்த பேராசிரியரைப் பதவி நீக்கம் செய்தமை, அனைத்து அரசு ஊழியர்களின் கருத்து சுதந்திரத்தை பாதிக்கும் வகையில் அதிகாரபூர்வ கடிதம் வெளியிடுவதும் கருத்து சுதந்திரத்தை நசுக்கும் முயற்சியாகவே பார்க்கப்படுகிறது.**

**அட்டவணை 2: 2021 ஒக்டோபர்–நவம்பர் மாதம்: ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் – நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் 08**

| இலக்கம் | குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்கள் மற்றும் நிகழ்வுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | தாக்குதல் சம்பவம் | 02 |
| 02 | உளவியல் ரீதியான துஷ்பிரயோகம் | 06 |
| | **மொத்தம்** | **08** |

1. **பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்கவின் வட்ஸ்அப் உரையாடல்களைக் குற்றவியல் விசாரணைத் திணைக்களம் இரகசியமாகச் செவிமடுத்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்த கருத்து.**

   கடந்த ஒக்டோபர் மாதம் 21ஆம் திகதி பாராளுமன்றத்தில் விசேட அறிக்கையொன்றை விடுத்த பாராளுமன்ற உறுப்பினரான பாட்டலி சம்பிக்க ரணவக்க, தான் முன்னைய அரசாங்கத்தில் அமைச்சராகப் பதவி வகித்தபோது நீதிமன்றத்தின் அனுமதியின்றி தனது தொலைபேசி உரையாடல்களைக் குற்றவியல் விசாரணைத் திணைக்களம்இரகசியமாக ஒட்டுக்கேட்டதாகவும், அந்தச் செயற்பாடானது பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் தனது சிறப்புரிமைகளை மீறுவதுடன் இது சட்டவிரோத செயல்பாடு எனவும் அவர் மேலும் தெரிவித்தார். பாராளுமன்ற சிறப்புரிமைக் குழுவின் முன் விசாரணைக்காகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைக்குமாறு அவர் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

   வாக்குமூலமொன்றை வழங்குவதற்காகக் குற்றவியல் விசாரணை திணைக்களத்திற்கு சென்றபோது அதிகாரிகளினால் இது தெரியவந்ததாகவும், அந்த உரையாடல்களின் பிரதிகளைக் குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் பணிப்பாளர் பிரசாத் ரணசிங்க உரிய அதிகாரிகளிடம் வழங்கியதாகவும் அவர்

மேலும் குறிப்பிட்டார். இந்த உரையாடல்கள் வாட்ஸ்அப் மூலம் இடம்பெற்றதால், சாதாரண அழைப்புகள் போன்று கேட்க முடியாது என்றும், எந்தத் தொழில்நுட்பத்தின் உதவியுடன் அழைப்புகள் ஒட்டுக்கேட்கப்பட்டன, மேலும் அவ்வாறு ஒட்டுக்கேட்க உதவிய தொழில்நுட்பம் எங்கிருந்து வந்தது என்பதை விசாரிக்க வேண்டும் என்றும் அவர் தனது அறிக்கையின் போது தெரிவித்தார். சர்ச்சைக்குரிய பெகாசஸ் (Pegasus) உளவு மென்பொருள் குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் வசம் உள்ளதா என அவர் மேலும் கேள்வி எழுப்பினார்.

பெகாசஸ் (Pegasus) எனப்படும் ரகசிய மென்பொருள், இஸ்ரேலைச் சேர்ந்த என்எஸ்ஓ எனும் இணையப் பாதுகாப்பு (சைபர் செக்யூரிட்டி) நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது. மேலும் இது பெரும்பாலான iOS மற்றும் Android தொலைபேசிகளில் (மற்றும் பிற சாதனங்களில்) ரகசியமாக நிறுவப்படலாம். 2016 ஆண்டுகளில் பெகாசஸ் (Pegasus) உளவு மென்பொருள் குறுஞ் செய்திகளைப் படிக்கும் திறன், அழைப்புகளைக் கண்காணிப்பது, கடவுச்சொற்களைச் சேர்ப்பது, இருப்பிடங்களைக் கண்காணிப்பது, இலக்கு சாதனத்தின் நுண் ஒலிபேசி(மைக்ரோஃபோன்) மற்றும் கேமராவை அணுகுவது மற்றும் பயன்பாடுகளிலிருந்து தகவல்களைச் சேகரிப்பதற்கு குறித்த மென்பொருள் திறன்கொண்டதாகும். ஆதாரம்: விக்கிபீடியா Pegasus (spyware) பக்கம்

இந்த உளவு மென்பொருள் தொடர்பாக 99 சிவில் சமூக அமைப்புகள் மற்றும் பல்வேறு வல்லுநர்கள் கையெழுத்திட்ட மனு ஒன்று, ஐக்கிய நாடுகளின் 46வது அமர்வில் Accessnow அமைப்பால் செப்டம்பர் 30 ஆம் திகதி அன்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. Pegasus துப்பறியும் தொழில்நுட்பத்தின் விற்பனை, ஏற்றுமதி, பரிமாற்றம் மற்றும் பயன்பாடு ஆகியவற்றால் எளிதாக்கப்படும் மனித உரிமை மீறல்கள்குறித்து சுயாதீன விசாரணையை விரைந்து நடத்தி, இது போன்ற சட்டவிரோத உளவு சேகரிப்பதைத் தடுக்க விரிவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதே மனுதாரர்களின் முக்கிய கோரிக்கையாக இருந்தது.

ஆதாரம்: 1. https://anidda.lk

2. ஹன்சாட் அறிக்கை 2021-10-21

2. **"சுற்றுச்சூழலுக்கு உகந்த விவசாயம் தொடர்பான அரசாங்கக் கொள்கைத் தீர்வு" தொடர்பாக வெளியிட்ட நிபுணத்துவக் கருத்து காரணமாக, பேராசிரியர் புத்தி மாரம்பேவை கமத்தொழில் அமைச்சில் அவர் வகித்த பதவிகளில் இருந்து நீக்கம் செய்யப்பட்டமை.**

தேசிய வேளாண்மைக் கொள்கை திட்டமிடல் குழுவின் உறுப்பினரும், விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் வழிநடத்தல் குழுவின் உறுப்பினரும், சிறு தொழில் நிறுவன விவசாயப் பங்கேற்புத் திட்டத்தின் ஆலோசகருமான பேராசிரியர் புத்தி மாரம்பேவை அமைச்சரின் உத்தரவின்படி அவர் வகித்த சகல பதவிகளில் இருந்தும் நீக்கியதாகக் கமத்தொழில் அமைச்சு ஒக்டோபர் 26 ஆம் திகதி அன்று அறிக்கையொன்றை வெளியிட்டது.

பேராசிரியர், தற்போதைய அரசின் கொள்கை ரீதியான முடிவுகளின் படி செயல்பட்டு வரும் சுற்றுச்சூழலுக்கு உகந்த விவசாயத்தை விமர்சித்துள்ளதுடன், மேலும் அதற்கு எதிராகப் பல்கலைக்கழக சமூகம், சமூக அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் அணிதிரள்வதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் கருத்து தெரவித்ததாகக் குறித்த கடிதத்தில் அவருக்கு எதிராகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் சிரேஷ்ட பேராசிரியரான புத்தி மாரம்பே கரிம விவசாயத் துறையில் முன்னணி ஆராய்ச்சியாளரும் முன்னோடியாகவும் கருதப்படும் அதேவேளை "விஞ்ஞான அறிவைப் பயன்படுத்தி அதனை அறிவியல்பூர்வமாக விளக்குவதைத் தவிர எந்த அடிப்படையும் இல்லாமல் விமர்சிக்கவில்லை" என அவரைச் சகல பதவிகளில் இருந்தும் தகுதிநீக்கம் செய்யப்பட்டதன் பின்னர் lankasara வலைத்தளத்திற்கு கருத்து தெரிவித்திருந்தமை கவனிக்கத்தக்கதாகும்.

ஆதாரம்: 1. https://www.newsfirst.lk

2. https://lankasara.com

3. **"சதியங்க அருண" பத்திரிகையின் கடந்த ஒக்டம்பர் 23 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட பிரதான தலைப்புச் செய்தி தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காகப் பத்திரிகையின் ஆசிரியர் மஹிந்த இலப்பெரும குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தால் அழைக்கப்பட்டமை.**

"இந்திய உரங்களுக்குச் செலுத்துவதற்காக 29 கோடியைத் தனிப்பட்ட கணக்கிற்கு வைப்பிடுமாறு ஜனாதிபதி செயலாளர் பீ.பி ஜயசுந்தர அழுத்தம் கொடுத்தார்" எனத் தலைப்பிட்ட கடந்த நவம்பர் 24ஆம் திகதி சதிஅக அருண நாளிதழில் வெளியான தலைப்பு தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளர் மேற்கொண்ட முறையீட்டின் படி, முறைப்பாடு செய்த அதே நாள் குறித்தப் பத்திரிகை ஆசிரியரைக் குற்றவியல் விசாரணை திணைக்களத்திற்கு அழைத்து விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இந்தச் செய்தி பொய்யானதும், தீங்கிழைக்கும் வகையிலானது என்றும், உடனடியாக இது தொடர்பில் அனைத்துத் தரப்பினரையும் அழைத்து இவ்விடயம் தொடர்பில் விரிவான மற்றும் தெளிவான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியின் செயலாளர் பொலிஸ்மா அதிபருக்குப் பணிப்புரை விடுத்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்து இந்த செய்தியின் மூலாதாரமாகும். இது தொடர்பில் ஊடகங்கள் பல செய்திகள் வெளியாகியிருந்த போதிலும், அருண நாளிதழின் ஆசிரியரிடம் மாத்திரம் கேள்வி எழுப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது. கடந்த நவம்பர் 9ஆம் திகதி பாராளுமன்றத்தில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், முடிந்தால் அருண பத்திரிகை ஆசிரியரை அழைத்து விசாரணை மேற்கொள்ளப்பட்ட அறிக்கையைப் பகிரங்கப்படுத்துமாறு குற்றவியல் விசாரணை திணைக்களத்திற்கு சவால் விடுத்தார்.

ஆதாரம்: 1. http://sinhala.adaderana.lk

2. https://www.newsfirst.lk/sinhala

4. **சர்ச்சையை ஏற்படுத்திய சீன உர கையிருப்பு குறித்த செய்தி வெளியிட்டமை காரணமாக அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளதாகவும், அதற்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்து உர இறக்குமதியாளர் சிரச ஊடக வலையமைப்பிற்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளமை.**

தீங்கு விளைவிக்கும் நுண்ணுயிர்கள் உள்ளதாக உறுதிப்படுத்தி தேசிய தாவர தடுப்புக் காப்புச் சேவையினால் நிராகரிக்கப்பட்ட சீனா நாட்டு உர இருப்பின் ஏற்றுமதியாளரான "சிந்தாவோ சீவின் பயோடெக்" நிறுவனம்குறித்த நெருக்கடி தொடர்பில் சிரச ஊடக வலையமைப்பிற்கு கடந்த நவம்பர் 07ஆம் திகதி அனுப்பிய கடிதத்தில் போலியான அறிவியல் பரிசோதனை அறிக்கைகளை வெளியிடும் மற்றும் பரிசோதனை பெறுபேறுகளை போலி பிரச்சாரம் செய்யும் ஊடகங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளத் தமக்கு உரிமை காணப்படுவதாக

எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

"இலங்கை ஒப்பந்தங்களை மதிக்காது மக்களைத் தவறாக வழிநடத்துவது புரிந்துகொள்ள முடியாது என்றும், மேலும் சீன நிறுவனம் ஒன்று இலங்கைக்கு தீங்கு விளைவிக்கும் நுண்ணுயிரிகளைக் கொண்ட கரிம உரங்களை ஏற்றுமதி செய்ததாகத் தவறான செய்தி உண்மையை அறியாத பல மக்களையும் நுகர்வோரையும் தவறாக வழிநடத்துவதன் மூலம் ஏற்றுமதி நிறுவனங்களில் நியாயமான வர்த்தகத்திற்கு பெரும் தடையாக உள்ளது." என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உர கையிருப்பு விவகாரம் தொடர்பில் ஊடகங்களில் வெளியான செய்திகளாலும், சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களில் அதிகாரிகளின் நேரடியான தலையீடுகளாலும், இந்தப் பரிவர்த்தனையில் ஈடுபட்ட தரப்பினரின் எதிர்பார்ப்புகள் பொய்த்துப் போனதுடன், ஊடகப் பங்களிப்பின் பிரதிபலிப்பாக இந்தக் கடிதத்தைக் கருதலாம். உர இருப்பு நிராகரிக்கப்பட்டதால் ஏற்பட்ட இழப்புக்கு 08 மில்லியன் அமெரிக்க டாலர் இழப்பீடு கோரி குறித்த நிறுவனம், தேசிய தாவர தடுப்புக் காப்புச் சேவையின் உதவி இயக்குநருக்குக் குறிப்பாணையொன்றை அனுப்பியுள்ளது.

ஆதாரம்: 1. https://www.youtube.com

2. https://divaina.lk

5. **சமூக ஊடகங்கள்மூலம் அரசாங்கத்தை அல்லது அரசாங்கத்தின் கொள்கைகளை விமர்சிக்கும் அரச ஊழியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் அரச ஊழியர்களுக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளமை.**

எந்தவொரு அரச ஊழியரும், சமூக ஊடகம் அல்லது ஏனைய முறைகளில் நிருவனத்திற்குள் அல்லது வெளி இடங்களில் அரசாங்க முடிவுகள் அல்லது செயற்பாடுகள் தொடர்பில் விமர்சனம் செய்தல், ஏளனம் அல்லது கேலி செய்யும் வகையில் கருத்து தெரிவித்தல் போன்ற விடயங்கள் தாபன விதிக்கோவையின்படி ஒழுக்காற்று நடவடிக்கை மற்றும் வகிக்கும் தகுதிக்குப் பொருத்தமற்ற முறையில் செயற்படுதல் போன்ற குற்றச்சாட்டுகளை மேற்கொள்ளலாமென அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் சார்பாக மேலதிக செயலாளர் விசாரணை - தம்மிக்க முத்துகல இந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளார். இது தொடர்பாக அரசப்பணித்துறையில் பணியாற்றும் அதிகாரிகளுக்குத் தெரிவிக்குமாறு மாவட்ட செயலாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்திற்குக் கல்வி மற்றும் சுகாதாரத் துறையைச் சேர்ந்த முன்னணி தொழிற்சங்கத் தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்தை விமர்சிப்பதற்கும் ஊடகங்களில் கருத்து தெரிவிப்பதற்கும் தாபன விதிக்கோவையில் உள்ள விதிகளை மேற்கோள்காட்டி சுகாதார செயலாளர் சுகாதார ஊழியர்களுக்கு "அனுப்பிய" கடிதம் மனித உரிமை பாதுகாவலர்களிடம் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளானது. கருத்துச் சுதந்திரம் அரசியலமைப்பில் உறுதியளிக்கப்பட்டுள்ளதுடன் அரசியலமைப்பானது தாபன விதிக்கோவையை விடப் பலம் வாய்ந்த ஆவணமாகவும் காணப்படுகின்றமை அவதானிக்கக்கூடிய காரணியாகும்.

ஆதாரம்: 1. https://www.lankaviews.com

2. https://theleader.lk

6. **ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பில் அரச புலனாய்வுப் பிரிவின் பிரதானி செய்த முறைப்பாட்டையடுத்து, கொழும்பு உயர்மறைமாவட்ட ஊடகப் பேச்சாளர் பேராசிரியர் அருட்தந்தை சிறில் காமினி குற்றவியல் விசாரணைத் திணைக்களம்விசாரணைக்காக அழைக்கப்பட்டமை.**

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் சஹ்ரானுக்கு அரச புலனாய்வு பிரிவு சம்பளம் வழங்கியதாக அருட்தந்தை சிறில் காமினி தெரிவித்த கருத்தில் தனக்கு அபகீர்த்தி ஏற்பட்டதாக அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே அவர்களால் குற்றவியல் விசாரணை திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்ற முறைபாட்டிற்கு அமைய அருட்தந்தை மூன்று நாள் குற்றவியல் விசாரணை திணைக்களத்திற்கு முன் அழைத்து விசாரணை விசாரணை செய்யப்பட்டார்.

முதன்முறையாக அழைப்பாணை விடுக்கப்பட்டபோது, அருட்தந்தை கைது செய்யப்படுவதைத் தடுக்க உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றார், மேலும் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் சார்பாகச் சட்டமா அதிபர் அவ்வாறு கைது செய்யப்பட மாட்டார் என்று நீதிமன்றத்திற்கு உறுதியளித்தார். அதன் படி குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்குச் சென்ற முதல் இரண்டு விஜயங்களின்போது, அருட்தந்தை எட்டு மணித்தியாலங்களுக்கு மேல் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

கடந்த நவம்பர் 22 ஆம் திகதி அன்று மூன்றாவது தடவையாக விசாரணைக்கு அழைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் கத்தோலிக்க அருட்தந்தைகள் சிலர் தனது எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் பதாகைகளை ஏந்தி குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு முன்னர் வந்து அமைதியான முறையில் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

ஆதாரம்: https://www.lankaviews.com

7. **கடந்த நவம்பர் 23ஆம் திகதி கிண்ணியாவில் படகு கவிழ்ந்து 6 பேர் உயிரிழந்த சம்பவத்தைக் கண்டித்து இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பில் செய்தி சேகரிக்கச் சென்ற மூன்று ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டக்காரர்களால் தாக்கப்பட்டனர்.**

திருகோணமலை கிண்ணியா பிரதேசத்தில் புஹாரி சந்திக்கு அருகில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன், அங்கு லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தினகரன் பத்திரிகையின் ஊடகவியலாளராகப் பணியாற்றும் அப்துல் சலாம் முஹம்மது யாசீமிற்கு தாக்குதல் நடத்திய நபர்கள் அவரின் தரவுகள் அடங்கிய ஸ்மார்ட் கையடக்க தொலைப்பேசியை எடுத்துச்சென்றுள்ளனர். மேலும் அவர் இது தொடர்பில் கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் CIB (1) 10/291 இன் கீழ் முறைப்பாடு செய்துள்ளார்.

யாசீமிற்கு தாக்குதல் நடத்தப்பட்ட அதே வேலை சக்தி நியூஸ் ஃ பர்ஸ்ட் செய்தியாளர் எச். எம் ஹலால்தீன் மற்றும் தினகரன் ஊடகவியலாளர் ஏ.எல்.எம் ரபாயிதீனிற்கும் தாக்கி அவர்களின் அறிக்கையிடலை தடுத்து விரட்டியடித்துள்ளனர்.

சுதந்திர ஊடக இயக்கம் இச்சம்பவத்தை கண்டித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டதுடன், இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்தி குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

ஆதாரம்: அந்த அறிக்கை

8. **முல்லைத்தீவில் உள்ள லங்காஸ்ரீ ஊடக நிறுவகத்தின் ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரன் முள்ளிவாய்க்கால் பகுதியில் செய்தி சேகரிக்கச் சென்றபோது இராணுவ படையினரால் தாக்கப்பட்டார்.**

நவம்பர் 27ஆம் திகதி காலை நெடுஞ்சாலை ஓரத்தில் அமைந்துள்ள "முள்ளிவாய்க்கால்" பெயர்ப்பலகையை படம்பிடித்துக் கொண்டிருந்தபோது, அதற்கு எதிர்ப்பைத் தெரிவித்த இராணுவ அதிகாரிகள் அவரைத் தாக்கி அவரது இரு கையடக்கத்

தொலைபேசிகளைப் பறித்துக்கொண்டனர். அதனைத் தொடர்ந்து இரத்தக் காயங்களுடன் இருந்த அவரைக் காவல்துறை அதிகாரிகள் முல்லைத்தீவு வைத்தியசாலையில் சேர்த்தனர். அவரைத் தாக்கியதாகச் சந்தேகிக்கப்படும் மூன்று இராணுவத்தினர் மறுநாள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படாமல் அன்றைய தினமே விடுவிக்கப்பட்டனர். விஸ்வச்சந்திரன் மருத்துவமனையிலிருந்து திரும்பியதையடுத்து, கடந்த 30ம் திகதி அவரது வீட்டுக்கு வந்த போலீசார், ராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட 2 கைத்தொலைபேசிகளையும் திருப்பிக் கொடுத்தனர். அதில் ஒன்று பலத்த சேதமடைந்ததாக விஸ்வச்சந்திரன் தெரிவித்தார்.

விஸ்வச்சந்திரனை முள்வேலியால் சுற்றப்பட்ட பனை மட்டையால் தாக்கியதாக வெளியான தகவல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதுடன். இந்த முழுச் சம்பவமும் ராணுவத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில் கவனமாகத் திட்டமிடப்பட்டதாகக் கூறி கடந்த 30ம் திகதி இலங்கை ராணுவம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. விஸ்வச்சந்திரன் தன்னை முள்வேலியில் சுற்றப்பட்ட பனை மட்டையால் தாக்கவில்லை என்றும், கை மற்றும் தடியால் தாக்கியதாகவும், கம்பி வேலியில் தன்னை சாய்த்து கையடக்கத் தொலைபேசிகள் பறிக்கப்பட்டதில் தான் காயம் அடைந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஆதாரம்:
1. webnewslk.com
2. https://www.army.lk
3. https://www.tamilguardian.com

## சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள்

**ஒக்டோபர்—நவம்பர் மாதங்களில், ஊடக சுதந்திரம் தொடர்பான சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் தலைப்பின் கீழ் வரும் ஒன்பது சம்பவங்கள் அவதானிக்கப்பட்டன. இவற்றில் ஆறு கடந்த கால நிகழ்வுகள் தொடர்பான முன்னேற்றங்கள், லசந்த விக்கிரமதுங்க படுகொலைக்கான சர்வதேச தீர்ப்பாயத்தின் முன் விசாரணை ஆரம்பமானதானது "பத்திரிகையாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்குத் தண்டனையின்மைக்கு" எதிரான போராட்டத்தை வலுப்படுத்தும் ஒரு சாதகமான நடவடிக்கையாகும். விசாரணையின்றி 18 மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த அஹ்னா.்ப் ஜஸீம், குற்றப்பத்திரிகை மேற்கொள்ளும்போது அவரது உரிமைகளைக் கடுமையாக மீறியமை அவதானிக்ககூடியதாக உள்ளது. கருத்துச் சுதந்திரத்தை மீறுவதாகக் கூறி இரண்டு அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதுடன், முக்கியத்துவம் வாய்ந்ததொறு அடிப்படை உரிமை மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் நிராகரிக்கப்பட்டது.**

**நீண்டகாலம் தொட்டே உறுதியளிக்கப்பட்டிருந்த ,இறந்தவர்களை நினைவு கூரும் உரிமைக்கு எதிராகத் தடை உத்தரவு கோரும் வளர்ச்சிப்போக்கை சவாலுக்கு உட்படுத்தும் வகையில் சாதகமான நீதிமன்ற தீர்ப்புகுறித்து முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் அறிக்கையிடப்பட்டது.**

**அட்டவணை 03**

**2021 ஒக்டோபர்—நவம்பர் : சட்ட விதிமுறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள்— 09 நிகழ்வுகள்**

| இலக்கம் | குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள் மற்றும் சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் | 08 |
| 02 | சட்ட சீர்திருத்த முன்மொழிவுகள் | 01 |
| 03 | ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்குத் தண்டனை வழங்கப்படாமை | 01 |
| | **மொத்தம்** | 10 |

1. **லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை உட்பட மூன்று ஊடகவியலாளர்களின் படுகொலைகள் தொடர்பாக நெதர்லாந்தின் ஹேக் நகரில் உள்ள ஊடகவியலாளர் படுகொலைகள் தொடர்பில் நிரந்தர பொது தீர்ப்பாயத்தின் விசாரணை ஆரம்பிக்கப்பட்டமை.**

லசந்த விக்ரமதுங்க, மிகேல் எங்கள் லோபெஸ் வெலேச்கோ மற்றும் நபில் அல்-சர்பாஜி போன்ற ஊடகவியலாளர்களின் கொலை தொடர்பில் நீதியை நிலைநாட்டத் தவறியுள்ளதாக இலங்கை, மெக்சிகோ மற்றும் சிரியா போன்ற நாடுகளுக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை விசாரிக்க "ஊடகவியலாளர் கொலைக்கான மக்கள் தீர்ப்பாயம்" (The People's Tribunal on the Murder of Journalists) தொடக்க அமர்வு நவம்பர் 2 ஆம் திகதி நெதர்லாந்தின் ஹேக் நகரில் தொடங்கியது.

ஊடக சுதந்திரம் தொடர்பாக முன்னணி அமைப்பான ப்ரீ ப்ரெஸ்

அன்லிமிடட் (FPU), எல்லைகளற்ற செய்தியாளர்கள் (RSF) மற்றும் ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும் குழு (CPJ) ஆகியவற்றின் கோரிக்கையைத் தொடர்ந்து, வழக்கு விசாரணையைத் தொடர நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் வழக்கை ஆரம்பிப்பதற்கு முடிவு செய்துள்ளது.

மூன்று ஊடகவியலாளர்களின் படுகொலைகளுக்கான விசாரணை திகதி அறிவிக்கப்பட்டுள்ளதுடன், லசந்த விக்ரமதுங்க கொலைக்கான முதலாவது வழக்கு விசாரணை 2022 ஜனவரி 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் நடைபெறும்.

ஆதாரம்: https://ptmurderofjournalists.org

2. **கவிதைத் தொகுப்பொன்றை எழுதியதற்காகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 18 மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த அஹ்னாப் ஜஸீமை நீதிமன்றத்தில் முன்னிலையில் ஆஜர்படுத்தியமை.**

கவிதைத் தொகுப்பை எழுதித் தீவிரவாதக் கருத்துக்களை ஊக்குவித்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த முஸ்லிம் இளம் கவிஞர் ஒருவருக்கு எதிராகப் புத்தளம் மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நவம்பர் 15ஆம் திகதி எடுத்துக்கொள்ளப்பட்டது.

பதினெட்டு மாதங்களுக்கு மேலாக எந்தவித நீதிமன்ற நடவடிக்கையுமின்றி அதேபோல் சட்டவிரோத தடுப்புக்காவல் உத்தரவுடன் CTID யின் பொறுப்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தனது தரப்பு மனுதாரர் முஹம்மது அஹ்னாப் முஹம்மது ஜசீமிற்கு எதிராகச் சதித்திட்டம் தீட்டிப் பயங்கரவாத தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவினர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளதாக அஹ்னாப் ஜெசீமின் வழக்கறிஞர் சஞ்சய வில்சன் ஜயசேகர குற்றம் சுமத்தியுள்ளார்

குற்றப் பிரேரணையின்போது சந்தேக நபருக்கும் அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிக்கும் தெரியப்படுத்துவது சட்டமா அதிபர் திணைக்களத்தின் பொறுப்பாக இருந்த போதிலும் அவ்வாறு செய்யவில்லை எனவும் அது அடிப்படை நீதி மற்றும் அடிப்படை உரிமைகளை மீறும் செயற்பாடு எனவும் அவர் மேலும் தெரிவித்தார். கைது செய்யப்பட்டமைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட அடிப்படை உரிமை மனு உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வர உள்ளது.

ஆதாரம்: http://www.jdslanka.org

3. **1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (தற்காலிக ஏற்பாடுகள்) மீளாய்வு தொடர்பான அதிகாரிகள் குழுவின் அறிக்கையை ஜனாதிபதிக்கு கையளித்தமை.**

உள்ளூர் மற்றும் சர்வதேச மட்டங்களில் கடுமையாக விமர்சிக்கப்படும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை (தற்காலிக ஏற்பாடுகள்) மீளாய்வு செய்வதற்கு ஜனாதிபதி அமைச்சரவை உபகுழுவை நியமித்ததுடன் அது தொடர்பில் வேறு பரிந்துரைகளை மேற்கொள்வதற்காக இந்த அதிகாரி குழுவை கடந்த 2021 ஜுன் 24 ஆம் திகதி நியமித்தார். குழுவின் தலைவரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கமல் குணரத்னவினால் நவம்பர் 15ஆம் திகதி ஜனாதிபதியிடம் அறிக்கை கையளிக்கப்பட்டது. இருப்பினும் அறிக்கையின் உள்ளடக்கம்குறித்து எதுவும் பகிரங்கப்படுத்தப்படவில்லை.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி, சர்வதேச நியமங்களுக்கு அமைவாகப் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களை அறிமுகப்படுத்துமாறு 2019 பெப்ரவரியில் இலங்கை அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையின்போது ஐரோப்பிய ஒன்றியம் அழைப்பு விடுத்ததுடன் அந்தச் சட்டத்திற்கு பதிலாகச் சர்வதேச மனித உரிமைக் கடமைகளுக்கு மதிப்பளிக்கும் சட்ட உருவாக்கத்திற்கு இலங்கை அரசாங்கம் செயற்பட வேண்டும் என ஹியுமன் ரயிட்ஸ் வொச் அமைப்பு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆதாரம்: https://www.lankadeepa.lk

4. **கொத்தலாவல சட்டத்திற்கு எதிராக பாராளுமன்ற சுற்றுவட்டத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது கைது செய்யப்பட்ட ஐந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் 105 நாட்களின் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.**

கடந்த ஆகஸ்ட் 03ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு அருகாமையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கைதுசெய்யப்பட்டு 105 நாட்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட மாணவ மக்கள் இயக்கத்தின் கோஷிலா ஹன்சமாலி முன்னிலை சோஷலிஷ கட்சியின் நிர்வாகச் செயலாளர் சமீர கொஸ்வத்த, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைகழக மாணவர் சங்கத்தின் தலைவர் அமில சந்தீப, அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகே மற்றும் ரஜரட்ட பல்கலைகழக ஹேஷான் ஹர்ஷன போன்ற 5 பேர் நவம்பர் 15 ஆம் திகதி கடுவெல மாவட்ட / நீதவான் நீதிமன்றம் முன்னிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டனர. இவர்கள் கடந்த 11ஆம் திகதி ஹோமாகம நீதிவான் நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் அட்டைபெட்டியால் அமைக்கப்பட்ட சவப்பெட்டியை தீ வைத்து எதிர்ப்பு வெளியிட்ட காரணத்தினால் பிரதான பாதைக்கு 179,000 ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதாகப் பொதுச் சொத்துச் சட்டத்தின் கீழ் அவர்கள்மீது காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்துள்ளனர். இதன் விளைவாக, அவர்கள் நீதிவான் நீதிமன்றத்தில் பிணைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை,. மேலும் அவர்களுக்கு சிறையில் கொவிட் தொற்று ஏற்பட்டதன் காரணமாக மிக்க சுகாதார சிக்கல்களுக்கு முகம்கொடுத்தனர்.

5. **சமூக வலைதளத்தில் கருத்து தெரிவித்ததன் காரணமாகத் தம்மை அநியாயமாகக் கைது செய்தமையானது தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகத தெரிவித்து சமூக ஆர்வலர் சிரந்த ரன்மல் அமரசிங்க உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.**

சிரந்த அமரசிங்க என்ற மென்பொருள் உருவாக்குனர், குறித்த செயற்பாடானது தனது அடிப்படை உரிமைகளை மீறுவதாக அறிவித்து, தம்மிடமிருந்து எடுத்துச் சென்ற கணினி உபகரணங்களை மீள ஒப்படைக்குமாறு குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு உத்தரவிடுமாறும், ஒரு கோடி ரூபா நட்டஈடு வழங்குமாறும் கோரி உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இந்த மனுவில் பிரதிவாதிகளாகப் பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன உள்ளிட்ட 7 பேர் பெயரிடப்பட்டுள்ளனர்.

நவம்பர் 17, 2020 திகதி அன்று, சிரந்த அமரசிங்கவின் வீட்டிற்குச் சென்ற குற்றவியல் விசாரணைத் திணைக்கள அதிகாரிகள் குழு, கோவிட் தொற்றுநோயால் இறந்தவர்களின் உடல் தகனம் குறித்து அவர் பதிவிட்ட முகநூல் பதிவு சம்பந்தமாக அவரிடம் கேள்வி எழுப்பியதுடன், அந்தப் பதிவை இடப் பயன்படுத்தப்பட்ட கணினி உபகரணங்களுடன் மறுநாள் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு வருகை தருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. மறுநாள் அவர் அங்குச் சென்றபோது கைது செய்யப்பட்டு நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஆதாரம்: https://www.lankaviews.com

6. **பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் மூன்று மாதங்களுக்கும் மேலாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள லங்கா ஈ நியூஸ்**

**இணையத்தளத்தின் ஊடகவியலாளர் கீர்த்தி ரத்நாயக்க சார்பில் உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு தாக்கல்.**

குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தினூடாகக் கடந்த ஆகஸ்ட் 14 ஆம் திகதி கைது செய்யப்பட்டு மூன்று மாதங்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டதன் காரணமாகத் தனது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகக் கூறி அவருக்கு நேர்ந்த உரிமை மீறல் காரணமாக 100 மில்லியன் ரூபா நட்டஈடு வழங்குமாறு பிரதிவாதியிடம் கீர்த்தி ரத்நாயக இந்த அடிப்படை உரிமை மனுவில் கோரியுள்ளார்.

SCFR 363/2021 இலக்கம் கொண்ட மனுவை நவம்பர் 10ஆம் திகதி உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்திருந்த நிலையில், சட்டமா அதிபர், காவல்துறைக்குப் பொறுப்பான அமைச்சர் சரத் வீரசேகர, அந்த அமைச்சின் செயலாளர் ஜகத் பி. விஜேவீர, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரத்ன, பொலிஸ் மா அதிபர், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், குற்றப் புலனாய்வுப் பிரிவிற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் டபிள்யூ. திலகரத்ன, குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொஹான் பிரேமரத்ன, மற்றுமொரு குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் எஸ்பி ரந்தெனிய, சிசிடி பிரதிப் பொலிஸ் மா அதிபர், சிசிடி பணிப்பாளர் எஸ்எஸ்பி நந்தன குமார உள்ளிட்ட 20 பேர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

7. **அதிகாரிகளின் முறைப்பாட்டின் பேரில் New Citizen வலைத்தள ஊடக அமைப்பில் ஊடகவியலாளர் சியத் மென்டிஸ் என்பவரை வெலிக்கடை பொலிஸார் கைது செய்தமை.**

நாவல மயானத்தில் உள்ள நினைவுச் சின்னங்களை அகற்றி மேற்கொள்ளப்படும் கட்டுமானம் தொடர்பாகப் அறிக்கையிட்டமை காரணமாக, "குற்றவியல் முறையற்ற நுழைவு" செய்ததாக, நகராட்சி அதிகாரிகள் அளித்த புகாரின் பேரில், நவம்பர் 10ஆம் திகதி கைது செய்யப்பட்டார். அவர் கோட்டை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய அறிக்கை கடந்த ஒக்டோபர் 28ஆம் திகதி Voice of Colombo யூடியூப் சேனலில் வெளியிடப்பட்டுள்ளதுடன், குறித்த பிரச்சினைக்குக் காரணமான கட்டுமானம் தொடர்பான காட்சிகளும், பொதுமக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. சியத் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ராஜித கொடித்துவக்கு, பொதுநலன் கருதி வெளியிடப்பட்ட அறிக்கையினால் ஊடகவியலாளர் கைது செய்யப்பட்டமையானது உரிமை மீறலாகும் எனத் தெரிவித்தார்.

ஆதாரம்: https://www.youtube.com

8. **வடக்கில் யுத்தத்தில் இறந்தவர்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களை நினைவு கூருவதைத் தடுக்கும் வகையில் 8 பேருக்கு எதிராக வவுனியா நீதவான் தடை உத்தரவு பிறப்பித்து, பின்னர் அந்த உத்தரவில் திருத்தம் செய்தமை.**

கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் நினைவாக நினைவேந்தல்களை ஏற்பாடு செய்வதானது இன நல்லிணக்கத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் எனக் கூறி 1979 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் அந்த நிகழ்வைத் தடைசெய்ய வேண்டி வவுனியா காவல்துறையினர் வவுனியா நீதிவான் நீதிமன்றத்திற்கு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சங்கத்தின் தலைவர் கே.ஜயவனிதா, சங்கத்தின் செயலாளர் கோபால கிருஷ்ணன் ராஜ்குமார், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவமோகன், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சங்கத்தின் உறுப்பினர்களான கஜன் கஜெந்திரன், செல்வநாயகம் அரவிந்தன், சுப்ரமணியன் தவபாலசிங்கம் போன்றவர்களுக்கு இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

எனினும், நவம்பர் 25 ஆம் திகதி , பிரதிவாதிகளின் வழக்கறிஞர்களின் மேல்முறையீட்டை விசாரித்த மாஜிஸ்திரேட், அந்த உத்தரவை ரத்து செய்து, இறந்தவர்களை நினைவு கூர்வது குடிமக்களின் உரிமை என்றும், எந்தவித தடை செய்யப்பட்ட அமைப்பின் சின்னமும் வைக்கப்படாமல் நினைவேந்தலை மேற்கொள்ள எந்தவித தடையும் இல்லை என்றும் தீர்ப்பளித்தார்.

தடை உத்தரவை இரத்து செய்யும் தீர்ப்பிற்கு எதிராக நவம்பர் 26 ஆம் திகதி முல்லைத்தீவில் உள்ள ஏழு காவல் நிலையங்கள் மீண்டுமொறு மேன்முறையீட்டை தாக்கல் செய்தபோதிலும் நீதவான் டீ. சரவணபவன் குறித்த மேல்முறையீட்டை நிராகரித்தார்.

ஆதாரம்: 1. https://www.lankaviews.com

2. https://www.tamilguardian.com

9. **பலவந்தமான தனிமைப்படுத்தலின் மூலம் தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.**

பலவந்தமாகத் தனிமைப்படுத்தப்பட்ட நிலையத்திற்கு அனுப்பப்பட்டதன் மூலம் தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதாகக் கூறி இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு நவம்பர் 22 திகதி அன்று, தள்ளுபடி செய்யப்பட்டது.

தான் அமைதியான போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும்போது கைதுசெய்யப்பட்டு பின்னர் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் பிணை வழங்கப்பட்ட பின்னரும் பலவந்தமாகத் தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு அனுப்பியதுடன் தனது விருப்பத்திற்கு மாறாக நீண்டகாலம் தடுத்து வைத்ததன் காரணமாகத் தனது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகத் தீர்ப்பு அளிக்குமாறு கோரிய குறித்த மனுவானது விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாமலேயே அந்த வழக்கைச் செயலிழக்கச் செய்ய உயர்நீதிமன்றம் முடிவு எடுத்தது.

பிரியந்த ஜயவர்தன, ஷிரான் குணரத்ன மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் அடங்கிய உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குழாம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

ஆதாரம்: https://www.lankaviews.com

## நிபுணத்துவம்

**'நிபுணத்துவம்' என்பது ஊடக சுதந்திரம் தொடர்பாகக் கவனிக்கப்படும் ஒரு முக்கிய காரணியாகும்.சிறந்த கல்வியை பெற்ற பத்திரிகையாளர்கள், பத்திரிகையாளர்களின் பணி நிலைமைகள், பத்திரிகையாளர்கள் மற்றும் பத்திரிகை ஆசிரியர் குழுவிற்கான சர்வதேச வழிகாட்டுதல்களைப் பயன்படுத்துதல், சுய–தணிக்கை, தொழிற்சங்கங்கள் மற்றும் அமைப்புக்கள் மூலம் பத்திரிகையாளர்களின் நிபுணத்துவ சுயாட்சி உறுதிப்படுத்தப்படல் மற்றும் பத்திரிகையாளர்களின் சமூக பங்குபற்றிய புரிதல் போன்ற ஆறு காரணிகளும் இந்தக் குறிகாட்டியை பிரதிநிதிப்படுத்துகின்றது. இந்த குறிகாட்டிகளில் நேர்மறையான பல நிகழ்வுகள் குறித்த காலப்பகுதியில் பதிவாகியுள்ளமை கவனிக்கத்தக்கதாகும். அது, மூத்த எழுத்தாளர் ஒருவரின் சர்ச்சைக்குரிய கருத்தாகும். ஒட்டுமொத்தமாக, கடந்த இரண்டு தசாப்தங்களாக வளர்ச்சியடைந்த ஊடக சீர்திருத்தப் பேச்சு மற்றும் நேர்மறையான முயற்சிகளுக்கு இது முற்றிலும் மாறுபட்ட கருத்தாகும். “இலங்கை ஊடகவியலாளர்களின் பட்டய நிறுவனம்“ தொடர்பாக முன்வைத்த யோசனை ஊடகத்துறையில் ஒரு சாதகமான வாய்ப்பாகக் கருதலாம். ஊடக நெறிமுறைகளைக் கூட்டு உடன்படிக்கையுடன் உருவாக்குவதற்கு வெகுசன ஊடகம் அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட யோசனையும் சாதகமானதாகும்.**

**அட்டவணை 04 : 2021 ஒக்டோபர் – நவம்பர் : நிபுணத்துவம் – 02 நிகழ்வுகள்**

| இலக்கம் | குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள் மற்றும் சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | பத்திரிகையாளர்கள் மற்றும் ஆசிரியர் குழு சர்வதேச வழிகாட்டுதல்களைப் பயன்படுத்துதல் / சுய-தணிக்கை / தொழிற்சங்கங்கள் மற்றும் அமைப்புக்கள் மூலம் தொழிற்சங்க சுயாட்சி உறுதிப்படுத்தப்படல் / பத்திரிகையாளர்களின் சமூக பங்குபற்றிய புரிதல் | 02 |
| 02 | பத்திரிகையாளர்கள் சிறந்த கல்வியைப் பெற்றிருத்தல் | 01 |
| | **மொத்தம்** | **03** |

1. **இலங்கை பத்திரிகை பேரவை அறிமுகப்படுத்திய ஊடக ஒழுக்கக்கோட்பாடுகள் கட்டமைப்பின் 40வது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த மாநாட்டில் செய்தி ஆசிரியர் ஒருவர் தெரிவித்த கருத்து ஊடக சமூகத்தில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.**

   இலங்கை பத்திரிகை பேரவை சட்டத்தின் கீழ் இரண்டு வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்படும் தண்டனை பலராலும் விமர்சிக்கப்படுவதாகவும் தான் அதனை ஒரு தவறாகப் பார்க்கவில்லையென ஞாயிறு லங்காதீபவின் பிரதம ஆசிரியரும் இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கத்தின் உறுப்பினருமான அரியநந்த தொம்பகஹவத்த தெரிவித்தார்.

   இலங்கை பத்திரிகைப் பேரவை சட்டத்தை நீக்க வேண்டும் என்று இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கத்தின் நீண்டகால நிலைப்பாடு இருந்தபோதிலும், இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கத்தில் தானும் ஒரு அங்கத்தவராக இருந்தாலும் கூட எது தவறு எது என்பதை தன்னால் கூற முடியும் என அவர் மேலும் தனது உரையில் தெரிவித்தார். இலங்கைப் பத்திரிகைப் பேரவையை ஒழிக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளின் பின்னணியில் அரசியல் இருப்பதாகவும், அது ஒருவர் அல்லது இருவருக்கு தேவையாக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கைப் பத்திரிகைப் பேரவைக்கு மாற்றாக அமைக்கப்பட்ட சுய-ஒழுங்குமுறை பொறிமுறையான இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு பற்றியும் அவர் குறிப்பிடவில்லை.

   ஆதாரம்: 1. https://www.youtube.com

   2. https://anidda.lk

2. **ஊடகவியலாளர்களுக்காக “இலங்கை பட்டய ஊடகவியலாளர்கள் நிறுவனம்“ என்ற புதிய நிறுவனத்தை நிறுவுவதற்கு வெகுசன ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெருமவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை ஒப்புதல்.**

   இதழியல் துறையில் இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பு வாய்ப்புகளை வழங்கக்கூடிய ஊடக உயர்கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமாக இந்த நிறுவனத்தை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு கூறுகிறது.

   ஆதாரம்: enbsl.lk

3. **கூட்டு முயற்சியினூடாக நவீன சமூகத்திற்கு ஏற்ற ஊடக நெறிமுறை கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பாக ஊடகத்துறை அமைச்சர் தெரிவித்த கருத்து.**

   ”அனைத்து ஊடக மன்றங்கள், ஊடக தொழிற்சங்கங்கள், வெகுசன ஊடக அமைச்சகம், அரசாங்க தகவல் திணைக்களம் மற்றும் இலங்கை பத்திரிகை பேரவை ஆகியவை ஆரோக்கியமான உரையாடலை நடத்தி நமக்கு ஏற்ற நவீன மற்றும் நாகரிகமான நெறிமுறைகளைக் கூட்டாகக் கொண்டு வர வேண்டும்” என்று வெகுசன ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும கூறினார். கருத்து சுதந்திரம் மற்றும் ஜனநாயகம் ஆகிய கோட்பாடுகளைப் பாதுகாக்க அனைவரும் முன்வர வேண்டும் என அமைச்சர் மேலும் வலியுறுத்தினார்.

   இலங்கை பத்திரிகை பேரவையால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒழுக்கக் கோவையிற்கு 40வது ஆண்டு நிறைவை முன்னிட்டு அரசாங்க தகவல் திணைக்கள வளாகத்தில் நவம்பர் 14ஆம் திகதி நடைபெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

   ஆதாரம்: https://sinhala.news.lk

**அட்டவணை 5 : ஊடக சுதந்திரம் : 2021 ஜனவரி முதல் நவம்பர் வரை சுதந்திர ஊடக இயக்கத்தால் அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள் மற்றும் சம்பவங்களின் எண்ணிக்கை**

| உள்ளடக்கப்பட்டுள்ள பகுதிகூறுகள்/ குறிகாட்டிகள் | 2021 ஜனவரி– செப்டம்பர் | | 2021 ஒக்டோபர்– நவம்பர் |
|---|---|---|---|
| | புதிய நிகழ்வுகள் | முன்னைய நிகழ்வுகளின் வளர்ச்சிப்போக்கு | |
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 42 | | 08 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் | 40 | 05 | 09 |
| ஊடக சுயாதீனத்துவம் | 02 | | - |
| ஊடக சுதந்திரம் தொடர்பான புதிய ,முக்கிய போக்குகள் | 01 | | - |
| கட்டமைப்பு ரீதியான நிபந்தனை | 09 | | |
| நிபுணத்துவம் | | | 03 |

2021 ஊடக சுதந்திர உரிமைகள் கண்காணிப்பு அறிக்கை ஜனவரி-செப்டம்பர் வரை இங்கு பார்வையிடவும்

**பின்னுரை :** சிவில் சமூக குறிக்கோள்கள் ,தேசிய மற்றும் சர்வதேச வழக்கு தீர்ப்புகள் மற்றும் அனைத்துலக பிரகடனங்களுக்கு ஏற்ப , ஊடக சுதந்திரம் என்பது மனித உரிமை என சுதந்திர ஊடக இயக்கம் உடன்படுவதுடன்.அனைத்து மனிதர்களுக்கும் காணப்படவேண்டிய சிந்தனை சுதந்திரம், மனசாட்சி சுதந்திரம், மதச்சுதந்திரம் மற்றும் மற்றவர்களின் கருத்துக்களை தெரிந்து கொள்வதற்கான அடிப்படை உரிமைகளை தடையேதும் இன்றி அனுபவிப்பதற்கான சுதந்திரமே மனித உரிமையாகும். இந்த அடிப்படையில் ஊடக சுதந்திரம் என்பது பின்வரும் பத்து பகுதிகளை உள்ளடக்கிய தொகுப்பு என சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

(1) சுதந்திரமாக சிந்திக்கும் உரிமை(2) கருத்து தரிப்பதற்கான சுதந்திரம் (3) கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம்(4) அமைதியான முறையில் ஒன்றுகூடும் (5) தகவல் அறியும் உரிமை (6) கேட்டல் மற்றும் பார்த்தல் வழி சார்ந்த பதிவு செய்தல் மற்றும் அறிக்கை வைத்துக்கொள்வதற்கான சுதந்திரம் (7) பதிப்புச்சுதந்திரம் (8) செய்திப்பத்திரிகை சுதந்திரம் (9) இலத்திரனியல் ஊடக சுதந்திரம் (10) இணைய சுதந்திரம். என்பனவையே இதன் பகுதிகூறுகள் ஆகும்.

இந்த ஒவ்வொரு பகுதிகளும் ஒன்றோடொன்று தொடர்பு உடையதாகவே காணப்படுவதனால் ஒரு பகுதிகூறுக்கு ஏற்படும் வரையறைகள் மற்றும் தாக்கங்கள் ஊடக சுதந்திரம் தொடர்பில் காணப்படும் அனைத்து பகுதிக்கூறுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை சுதந்திர ஊடக இயக்கம் ஏற்றுக்கொள்கின்றது. எனவே பொறுப்பற்று மற்றும் வெறுப்புணர்வுடன் மேலே குறிப்பிட்ட சுதந்திரங்களை அத்துமீறி அனுபவிப்பதானது சிறந்ததொரு முறையல்ல என்பதனை சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

இந்த மாதாந்த அறிக்கை தயாரிக்கபடுவது பொது ஊடகத்தில் பிரசுரிக்கப்படும் மற்றும் சுதந்திர ஊடக இயக்கத்திற்கு கிடைக்கப்பெறும் தவல்களுக்கு அமைய மேலதிக தகவல்களை தேடி அறிந்து அந்த நிகழ்வுகளை ஆய்வுக்குட்படுத்திய பின்னரேயாகும்.இந்த ஆய்வின் போது சுதந்திர ஊடக இயக்கம் மேலே குறிப்பிட்ட பத்து ஊடக சுதந்திர சுட்டெண் பகுதிகளை உள்ளடக்கிய சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏழு தொகுப்புகளின் ஊடாக தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை அளவுகோல்களை கொண்டே கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்கின்றது.

**Free Media Movement**

Convener: Lasantha De Silva +94 71 166 7938, +94 77 810 7620 | Secretary: Hana Ibrahim +94 77 741 2995
Treasurer: Ananda Jayasekara +94 77 312 4850
No 96, Bernard Soysa Mw, Colombo 05. Tel: +94 112368895 Fax: +94 112368895;
Web: www.fmmsrilanka.lk, www.mediareform.lk
Email: fmmsrilanka@gmail.com | Facebook: https://www.facebook.com/fmm.srilanka
Twitter: https://twitter.com/FMMsrilanka | #FMM25